# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

**தாபனச் சுற்றறிக்கை இலக்கம் : 16/2018**

இலக்கம் 20,வோட் பிளேஸ்
கொழும்பு 07.

2018.12.26

பல்கலைக்கழக துணைவேந்தர்கள்

வளாக அதிபதிகள்

நிறுவகங்களின் பணிப்பாளர்கள்

**<u>பல்கலைக்கழக முறைமையிலுள்ள ஊழியர்களை இடமாற்றுதல்</u>**

1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 78 ஆவது பிரிவு மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவகங்களின் தாபன விதிக்கோவையின் IV ஆவது அத்தியாயத்தின் I ஆவது உறுப்புரை மீது தங்களது கவனத்தை ஈர்க்கச் செய்கின்றேன்.

பல்கலைக்கழகங்களுக்கிடையிலான இடமாற்றங்களை எதிர்பார்த்து உரிய முறையில் பூரணப்படுத்தப்பட்ட ஊழியர்களின் இடமாற்றங்களுக்கான விண்ணப்பங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு கிடைக்கும் ஒழுங்குமுறையில் உரிய உயர்கல்வி நிறுவனங்கள் / நிறுவனங்களுக்கு அனுப்புவதற்கு 2018.09.20 ஆம் திகதி நடைபெற்ற பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 995 ஆவது கூட்டத்ததொடரின்போது தீர்மானிக்கப்பட்டது.

மேலும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஊடாக இடமாற்றங்களைப் பெற்று உரிய உயர் கல்வி நிறுவனங்களில் / நிறுவனங்களில் கடமையைப் பொறுப்பேற்றுக்கொண்ட ஊழியர்களின் இடமாற்றங்களுக்கான விண்ணப்பங்கள், அவர்கள் இடமாற்றத்தைப் பெற்றுக்கொண்ட உயர் கல்வி நிறுவனங்களில் / நிறுவனங்களில் குறைந்தது ஒரு வருட காலம் சேவையாற்றும்வரை அவர்கள் இதற்கு முன்னர் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்த உயர் கல்வி நிறுவனங்கள் / நிறுவனங்கள் தொடர்பாக கவனத்திற்கொள்ளப்படுவதில்லையெனத் தீர்மானிக்கப்பட்டது.

மேலும், ஏனைய முறைகள் ஊடாக நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதற்கு முன்னர், பல்கலைக்கழகங்களுக்கிடையில் இடமாற்றங்களை எதிர்பார்க்கும் ஊழியர்களுக்கு முன்னுரிமை வழங்குவதற்கு உயர் கல்வி நிறுவனங்கள் / நிறுவனங்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென 2012.01.04 ஆம் திகதிய 974 ஆம் இலக்க ஆணைக்குழுச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் மீது தங்களது கவனம் ஈர்க்கச் செய்யப்படுகின்றது.

அதற்கமைய, 02/2018 ஆம் இலக்க தாபன சுற்றறிக்கை இரத்துச் செய்யப்படுவதுடன், இந்தச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் 2019.01.01 ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்படும்.

தயவுசெய்து இதன் பிரகாரம், நடவடிக்கை மேற்கொள்ளவும்.

**ஒப்பம்: பேராசிரியர் மொஹான் த சில்வா**

தலைவர்

**பிரதிகள்:-**

1. செயலாளர், உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு.
2. தலைவர் அலுவலகம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
3. உப தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
4. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உறுப்பினர்கள்,
5. செயலாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

6. பீடாதிபதிகள்.
7. பல்கலைக்கழகங்களின் பதிவாளர்கள்.
8. கணக்காளர், பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக்குழு.
9. பல்கலைக்கழகங்களின் நிதிப் பொறுப்பாளர்கள் (Bursars).
10. நூலகர்கள், சிரேஷ்ட உதவி நூலகர்கள், உதவி நூலகர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள்.
11. பிரதிப் பதிவாளர்கள் /சிரேஷ்ட உதவிப் பதிவாளர்கள்/ உதவிப் பதிவாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் /வளாகங்கள்.
12. பிரதி நிதிப் பொறுப்பாளர்கள்/சிரேஷ்ட உதவி நிதிப் பொறுப்பாளர்கள் / உதவி நிதிப் பொறுப்பாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் /வளாகங்கள்
13. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
14. பல்கலைக்கழகங்களின் அரசாங்க கணக்காய்வு அத்தியட்சகர்கள்
15. உயர் கல்வி நிறுவகங்களின் சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள் /உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள்.
16. தொழிற்சங்களின் செயலாளர்கள்.
17. கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

கோப்பு இலக்கம் : UGC/HR/5/1